**செ. கு. எண்**: 303 **நாள்**: 24-08-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 24.8.2012

கரூர் மாவட்டம் மற்றும் வட்டம், கரூர் பேருந்து நிலையத்தில் 23.8.2012 அன்று தோரணக்கல்பட்டி கிராமம், டி.செல்லாண்டிபாளையத்தைச் சேர்ந்த திரு. சங்கரலிங்கம் என்பவரின் மகன் திரு. தமிழ்மணி மீது அரசுப் பேருந்து மோதியதில் அவர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்த திரு. தமிழ்மணியின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த திரு. தமிழ்மணியின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**